மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியில் உள்ள பல் வைத்தியப் பிரிவில் பல் நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி அளிக்கும் திட்டம் இல்லாமலிருந்தாலும், தமிழகத்தில் வேறு எந்த மருத்துவக் கல்லூரியிலாவது அப்படிப்பட்ட திட்டம் நடைமுறையில் இருக்கிறதா? வேறு மருததுவக் கல்லூரிகளில் நடைமுறையில் இருந்தால், பிறகு அங்கும் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பல் நல உதவியாளர்களுக்கென்று இந்தப் பயிற்சி சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது. இதிலே பயிற்சி பெறுகிற மாணவர்கள் ஓராண்டுக்கு ஆறு பேர்கள்தான். அப்படிச் சில ஆண்டுகளாகப் பயிற்சி பெற்ற அனைவரும் கூட இன்னும் வேலையில் சேர்ந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. 'மெட்ராஸ் மெடிகல் காலேஜ்' என்று வழங்கப்படுகிற சென்னை மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றிருக்கின்ற அந்த மாணவர்களுடைய எண்ணிக்கையே தேவைக்குப் போதுமானதாக இருக்கிறது. மேலும், அவர்களுக்கு மாத மொன்றுக்கு 50 ரூபாய் வீதம் உதவித் தொகையும் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. எனவே, வேறு பல இடங்களில் விரிவாக்கப்படுவது இயலாத தொன்றாகும்.

திரு. என். கிட்டப்பா: பல் வைத்தியம் பார்க்கக்கூடிய டாக்டர்களை, நமது மாநிலத்தில் எல்லாத் தாலுக்காத் தலைநகரங்களிலும் உள்ள அரசு மருத்துவ மனைகளில் நியமிப்பது குறித்து அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது இந்தக் கேள்வியிலிருந்து •எழுவதல்ல. உறுப்பினரவர்கள் டாக்டர்களைப்பற்றிக் கேள்வி கேட்கிறார். ஆனல், இது பல் நல உதவியாளர்களை (ஹைஜினிட்ஸ்) பற்றியது. இருந்தாலும், அப்படி தாலுக்கா மருத்துவ மனைகளில் அமைப்பதற்கான ஒரு பொது நோக்கம் இருக்கிறது. ஓராண்டுக்கு இத்தனை தாலுக்கா மருத்துவ மனைகளில்தான் ஏற்படுத்த முடியும் என்று திட்டம் இருக்கிறது. அதுபற்றி வேறு விதமான பரிசீலனையும் இருக்கிறது. அது முடிந்து அதற்கேற்ப அவர்கள் குறிப்பிடுகிற ஊர்களிலே அது தொடங்கப்படும்.

### கோவை அரசு தலைமை மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு

*2 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் தலைமை மருத்துவமனையில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

(இ) ஆம் எனில் இக்குறையை நீக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) குடி தண்ணீர் தட்டுப்பாடு ஓரளவு இருந்தாலும் குறிப்பிட்ட நேரங்களில் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றைய தேவைகளுக்குச் சில மணி நேரங்

கள் கிணற்று நீர் வழங்கப்படுகிறது. கோவை மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சையரங்கத்திற்கும் இரத்த சேமிப்பு நிலையத்திற்கும் நாள் முழுவதும் நீர் வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனையை மேலும் பெரிதாக்குகிறபொழுது கூடுதல் நீர்த் தேவையும் கருத்தில் கொள்ளப்படும்.

திரு. சு. துரைசாமி: சில நாட்கள் அங்கே தண்ணீர்ப் பற்றுக்குறை காரணமாக அங்கிருக்கும் நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடு வராமல் அதற்குப் போதிய தண்ணீர் கிடைக்கும் ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கோவை நகரத்தினுடைய குடி தண்ணீர்ப் பிரச்சினை பொதுவானது. பொதுவாக, கிடைக்கிற நல்ல குடி தண்ணீரைத்தான் மருத்துவ மனைக்குக் குடி தண்ணீராகப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படிப் பயன்படுத்துவதற்குச் சில மணி நேரங்கள் வரையறுக்கப்பட்டு ஒரு நாளைக்கு 5-½ மணி நேரம்—காலையில் 2 மணி நேரமும், இடைவேளையில் 1-½ மணி நேரமும், மாலையில் 2 மணி நேரமும்—குடி தண்ணீர் கிடைக்கும்படியும் மிச்ச நேரத்திற்குக் கிணற்றுத் தண்ணீர் கிடைக்கும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குடி தண்ணீரை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தாமல் முறையாக அவசியமான தேவைக்குப் பயன்படுத்துகிற முறை கையாளப்பட்டு, அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை இல்லாமல், அவர்களுடைய முழுத் தேவையும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

### சென்னையிலுள்ள அரசு மருத்துவ மனைகள்

* 3 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இத்தேதியில் சென்னை மாநகரில் குளிர்சாதன வசதி கொண்ட அறுவை மருத்துவ சிகிச்சைக் கூடங்கள் உள்ள அரசு மருத்துவ மனைகள் எத்தனை?

(இ) அவற்றிற்காகும் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) சென்னை மாநகரத்தில் உள்ள மருத்துவ நிலையங்கள் 4 ஆகும்.

(இ) அவைகளுக்காக செலவாகிற தொகை ரூ. 8,63,697 (ரூபாய் எட்டு லட்சத்து அறுபத்து மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஏழு மட்டும்).

திரு. சு. துரைசாமி: இராயப்பேட்டையிலிருக்கும் அரசு மருத்துவ மனையில் குளிர் சாதனம பொருத்தப்பட்டுள்ள அறுவைச் சிகிச்சை தியேட்டர்கள் போதாமலிருப்பதால் அவற்றை விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையில் இரண்டு ஆபரேஷன் தியேட்டர்களுக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு ஆகியிருக்கும் செலவு ரூ. 1,10,600.